TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102030

1. District மாவட்டம் : ஈ.ரோடு  PS காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு ஈ.ரோடு  Year ஆண்டு: 2019  FIR No. மு.த.அ. எண்: 5/AC/2019  Date நாள்: 07.06.2019

2. (i) Act சட்டம்: 102 Cr.P.C r/w 7 of the —  Sections பிரிவுகள்: —
(ii) Act சட்டம்: — P.C. (Amendment) Act 2018  Sections பிரிவுகள்: —
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from நாள் முதல் : 6.6.2019  Date to நாள் வரை : —
Time Period நேர அளவு :  Time from நேரம் முதல் : 17.50 மணி  Time to நேரம் வரை : 23.30 மணி
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.06.2019  Time நேரம் : 11.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time நேரம் : 07.06.2019 / 11.00 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  சுயமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — சுமார் 60 கி.மீ மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் —  (b) Address : முகவரி நம்பியூர் சார்பதிவாளர் அலுவலகம், கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், ஈ.ரோடு மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —  District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. புஷ்பராஜ்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் V. சுவாமிநாதன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு —  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர்  (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, ஈ.ரோடு.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) D. சேகர், சார்பதிவாளர் 2) M. இதயத்துல்லா, அலுவலக உதவியாளர், நம்பியூர் சார் பதிவாளர் அலுவலகம், கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், ஈ.ரோடு மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் தாமதமில்லை

* GCP 240-34(Type-2) 90.000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : கைப்பற்றப்பட்ட பணம் ரூ 60,670/- மட்டும்.
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு (ரூ 26,500+ 1820+ 32,350= 60,670)

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

இப்புறம் தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant: Suo motu
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 7.6.19

15. Date & Time of despatch to the court: 07-06-2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 12.00மணி

Name: பெயர் S. புஷ்பராஜ்
Rank: நிலை காவல் துணை கண்காணிப்பாளர் No. எண் ..........
ஊ.த.த.பிரிவு, சி.ஜோ.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

சமர்ப்பிக்கப்படுகிறது.

**Contents of FIR in Cr.No 05/2019/AC/ER U/s 102 CrPC r/w Section 7 of the Prevention of Corruption (Amendment) Act 2018.**

ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டம், நம்பியூர் சார்பதிவக சார்பதிவாளர் திரு.பி.சேகர் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.எம்.இதயத்துல்லா ஆகியயோர்கள், பத்திரம் பதிவு செய்தல், பத்திர நகல்கள் வழங்குதல், வில்லங்க சான்று வழங்குதல் மற்றும் களப்பணி போன்ற சார்பதிவாளர் அலுவலக பணிகளை செய்வதற்கு, நேரடியாகவும், பத்திர எழுத்தர்கள் மற்றும் அவர்களது உதவியாளர்கள் மூலமாகவும், மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும், கையூட்டாக பணம் பெறுவதாகவும், அதை மாலையில் அலுவலகத்தை விட்டு புறப்படுவதற்கு முன்பாக அலுவலக படிக்கட்டு அருகே இருக்கும் இடைவெளியில் வைத்து அலுவலக கண்காணிப்பு காமிராவில் தெரியாதவாறு பெற்றுக்கொள்வதாகவும் கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் பேரில் 06.06.2019ம் தேதி மாலை சுமார் 17.50 மணிமுதல் 23.30 மணிவரை நம்பியூர் சார்பதிவகத்தில், ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் அரசு சாட்சிகள் திரு.சங்கர், த/பெ சுப்பையன், வேளாண்மை உதவி இயக்குநர், சென்னிமலை வட்டாரம், ஈரோடு மற்றும் திரு.சண்முகம், த/பெ தங்கவேல், முதுநிலை ஆய்வாளர், கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் அலுவலகம், ஈரோடு சரகம், ஈரோடு ஆகியோர் முன்னிலையில் போலீஸ் பார்ட்டியினருடன் திடீர் சோதனை மேற்கொண்டேன். அப்போது, மேற்குபார்த்து அமைந்திருந்த தரைத்தளம் மற்றும் முதல்தளத்துடன் கூடியிருந்த நம்பியூர் சார்பதிவகத்தில் சோதனை குழுவினர் சார்பதிவாளர் அலுவலக தரைத்தளத்தில் உள்ளே நுழைந்தபோது அலுவலகத்தினுள் பின்புறம் உள்ள முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டின் வலதுபுறமாக இருந்த காலியிடத்தில் நின்று ஒரு பெண்ணிடம் சார்பதிவாளர் திரு.சேகர் பணத்தை வாங்கி அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்துக்கொண்டிருந்தார். சோதனை குழுவினர் திடீர் சோதனைக்கு வந்த விபரத்தை நான் அவரிடம் தெரிவித்து, அவரை அவரது இருக்கைக்கு அழைத்துவந்து விசாரித்தபோது, அவர் தன்வசம் வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து இரண்டு கத்தைகளாக இருந்த மொத்தம் ரூ.26500/- பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி தொகையை பற்றி அவரிடம் விசாரித்தபோது, பக்கத்தில் நின்ற சரஸ்வதியிடம் கடன் வாங்கியதாக சொன்னார். ஆனால், தொகை எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. சார்பதிவாளர் கடன் வாங்கியதாக சொன்ன திருமதி.சரஸ்வதி அவர்களை விசாரித்தபோது, அவர் இன்று கே.ராயபாளையத்தை சேர்ந்த சண்முகம், பழனியம்மாள், சரண்யா மற்றும் வெங்கடேஷ்குமார் ஆகியோர்களது பாகப்பிரிவினை பத்திரம் சம்மந்தமாக மத்தியானம் வரைவு பத்திரம் சார்பதிவாளரிடம் கொடுத்துவிட்டு போனதாகவும், அதன்பிறகு மாலையில் தான் அந்த பத்திரத்தை வாங்க வந்ததாகவும், அப்போது அவர் வரைவு பத்திரத்தை தன்னிடம்

7-6-19

கொடுக்கவில்லை என்றும், தானோ அல்லது அவரது அலுவலகத்தை சார்ந்தவர்களோ சார்பதிவாளருக்கு இதுநாள் வரை கடன் கொடுத்ததே இல்லை என்றும் தெரிவித்தார். சார்பதிவாளர் திரு.சேகர் அவர்கள் வசம் காணப்பட்ட சரிவர கணக்கு சொல்லாத மொத்ததொகை ரூ.26500/- லஞ்சமாக பெறப்பட்டிருக்கும் என்பதால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், இந்த நடவடிக்கையில் தரைத்தளத்தில் இருந்த அலுவலக உதவியாளர் திரு.எம்.இதயத்துல்லா அவர்களை விசாரித்தபோது, அவர், அவரது சட்டை மேல்பாக்கெட்டில் இருந்து ஒரு கத்தையாக ரூ. 3500/-, பேண்ட் வலதுபக்க பின்பாக்கெட்டில் இருந்து 3 கத்தைகளாக ரூ.2000/- மற்றும் பேண்ட் வலதுபக்க பாக்கெட்டில் இருந்து 9 கத்தைகளாக மொத்தம் ரூ. 3,020/- ஆகிய தொகைகளை எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவருடைய இருக்கைக்கு பின்புறம் படிக்கட்டுக்கு செல்லும் வழியில் இருந்த இடைவெளியில் வைக்கப்பட்டிருந்த அவரது கருப்பு நிற கைப்பையை எடுத்து அதிலிருந்து ஒரு காக்கிநிற கவரில இருந்து ஒரே கத்தையாக இருந்த ரூ.5200/- யும் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி தொகைகளை பற்றி திரு.இதயத்துல்லாவிடம் விசாரித்தபோது, அவர் கவரில் இருந்த ரூ.5200/- ஏற்கனவே கொடிநாள் வசூலாக செய்த தொகை என்றும், தனது சட்டை மற்றும் பேண்ட் பாக்கெட்டில் இருந்த தொகை மொத்தம் ரூ.8520/-ல் இன்று 06.06.2019ம் தேதி கொடிநாள் வசூலுக்காக ரூ.3700/- வசூல் செய்யப்பட்டது என்றும், ரூ.3000/- இன்று காலை தான் அலுவலுக்கு வரும்போது கொண்டுவந்த சொந்தத்தொகை என்றும் தெரிவித்தார். மீதமுள்ள ரூ.1820/- பற்றி விசாரித்தபோது இன்று பத்திர பதிவிற்கும், இதர வேலைகளுக்கும் அலுவலகம் வந்த நபர்கள் தனக்கு அன்பளிப்பாக கொடுத்தது என்றும் தெரிவித்தார். எனவே, அன்பளிப்பு / லஞ்சமாக பெற்றதொகை ரூ.1820/- மட்டும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது திரு.இதயத்துல்லா அவர்களின் கருப்பு நிற கைப்பைக்கு பின்புறம் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ரெக்கார்டுகளுக்கு இடையில் ஒரு காக்கி நிற கவரில் ஒரே கத்தையாக ரூ.32350/- மடித்த நிலையில் வைக்கப்பட்டிருந்தது. மேற்படி தொகையை பற்றி சார்பதிவாளர் திரு.சேகர் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.இதயத்துல்லா ஆகியோர்களிடம் விசாரித்தபோது, இருவரும் தங்களுக்கு தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். மேலும் அலுவலகத்தில் இருந்த நபர்கள் அனைவருமே அந்த தொகையை பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். எனவே மேற்படி தொகை ரூ.32,350/- லஞ்சமாக பெறப்பட்டிருக்கும் என்பதால், காக்கிநிற கவருடன் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த சோதனையின் போது, அலுவலகத்தில் வசூலான அரசு தொகைகளை பற்றி சார்பதிவாளரிடம் கேட்டபோது, ஆன்லைன் மூலம் ரூ.3,04,186/- அரசுக்கு வசூலாகி இருப்பதாகவும், சார்பதிவாளர் அலுவலகத்தில் 38 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டது என்றும், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு 1 என்றும், வில்லங்க சான்று மனு 26 பெறப்பட்டது என்றும் சார்பதிவாளர் தெரிவித்தார். மேலும் அதற்கான பட்டியல்

7-6-19

பக்கம் 1 முதல் 20 வரை சான்றொப்பமிட்டு விசாரணைக்கு கொடுத்தார். கொடிநாள் நிதி வசூல் தொகை விபரம் சம்மந்தமாக எவ்வளவு தொகை இன்றைய தேதி வரை வசூல் செய்யப்பட்டது என்பது குறித்த சான்று பக்கம் 1 மற்றும் 2 சார்பதிவாளரிடமிருந்து பெறப்பட்டது. மேலும் தனிநபர் பண இருப்பு பதிவேட்டின் சம்மந்தப்பட்ட பக்கங்களின் சான்றொப்பமிட்ட நகல் (பக்கம் 1 முதல் 4 வரை) விசாரணைக்காக சார்பதிவாளரிடமிருந்து பெறப்பட்டது. இந்த சோதனையின் போது கைப்பற்றப்பட்ட தொகைகள் குறித்து சார்பதிவாளர் திரு.சேகர், அலுவலக உதவியாளர் திரு.இதயத்துல்லா ஆகியோரிடமும், அலுவலகத்தில் இருந்த தனிநபர் திருமதி.சரஸ்வதி, க/பெ. ருத்திரமூர்த்தி, திம்மப்பையம்பாளையம், இம்மாம்பூண்டி கிராமம், நம்பியூர் வட்டம் என்பவரிடமும் தனித்தனியாக வாக்குமூலங்கள் பெறப்பட்டது. இந்த திடீர் தணிக்கை சம்மந்தமான முழுமையான விபரங்கள் அனைத்தும் எனது நடவடிக்கைகள் நாள் 06.06.2019 ஆக கணிணியில் 06.06.2019ம் தேதி மாலை 17.50 மணிமுதல் மணி முதல் இரவு 23.30 மணி வரை தட்டச்சு செய்து தயார் செய்து முடிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது மொத்தமாக கைப்பற்றப்பட்ட தொகை ரூ.60,670/- ஆகும். ஈரோடு மாவட்டம், நம்பியூர் சார்பதிவாளர் திரு.பி.சேகர், மற்றும் அலுவலக உதவியாளர் திரு.மு.இதயத்துல்லா ஆகியோர்கள் இந்த திடீர் சோதனையின் போது சட்டப்பிரிவு 102 CrPC r/w Section 7 of the Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி குற்றம் புரிந்துள்ளதாக தெரியவருகிறது. எனவே, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக வாய்மொழி அனுமதிபெற்று, நம்பியூர் சார்பதிவாளர் திரு.பி.சேகர், மற்றும் அலுவலக உதவியாளர் திரு.மு.இதயத்துல்லா ஆகியோர்கள் மீது இன்று 07.06.2019ம் தேதி காலை 11.00 மணிக்கு ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 05/AC/2019 சட்டப்பிரிவு 102 CrPC r/w Section 7 of the Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது. முதல் தகவலறிக்கையின் அசலை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்கள் நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட உள்ளன.

7.6.19

(சா.புஷ்பராஜ்,)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
ஈரோடு.

இணைப்பு: நம்பியூர் சார்பதிவகத்தில் 06.06.2019ம் தேதி நடைபெற்ற திடீர் சோதனையின்போது 17.50 மணிமுதல் 23.30 மணிவரை தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கையின் போது பெறப்பட்ட வாக்குமூலங்கள் (பக்கம் 1 முதல் 22 வரை)